

FREE EDITION

November - 2018

# ஜோதி

# Jothi
## Spiritual Newsletter

ஜோதி 12 : சுடர் 09 -141

ஆன்மிகச் செய்திச்சுடர்

### மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

### அன்னையின் அருள்வாக்கு

### சொத்தும் - சுகமும்:

“பசு எங்கெல்லாமோ ஓடியாடிப் புல்லைத் தின்று மேய்ந்து பாலாக்கித் தன் கன்றுக் குட்டிக்குத் தருகிறது. கன்றுக் குட்டியும் தாய்ப் பசுவின் வலி தெரியாமல் முட்டி முட்டிப் பாலைக் குடிக்கிறது.

ஆடு திருட்டுத் தனமாக வேலிதாண்டிப் புகுந்து, தோட்டத்தில் மேய்ந்து அதைப் பாலாக்கித் தன் குட்டிக்குத் தருகிறது. ஆட்டுக் குட்டியோ தாயின் வலி தெரியாமல் வாலை ஆட்டிக் கொண்டு பாலைக் குடிக்கிறது.

நாய் கள்ளத் தனமாக உணவைத் திருடித் தன் இரத்தத்தையே பாலாக்கித் தன் குட்டிகளுக்கு ஊட்டுகிறது குட்டிகளும் சந்தோஷமாகக் குடிக்கின்றன.

அதுபோலவே மனிதனும் தன் வாழ் நாள் முழுதும் ஓடியாடிச் சம்பாதித்து தன் பிள்ளைகளுக்குச் சேர்த்து வைக்கிறான். பெற்றவன் கஷ்டம் புரியாமல் பிள்ளைகள் அனுபவிக்கிறார்கள்.

நீங்கள் சேர்க்கும் சொத்தும் சுகமும் எப்படிப்பட்டவை என்பதைப் புரிந்து கொண்டு வாழ வேண்டும்.”

## மேல்மருவத்தூர்!
## மலரும் நினைவுகள்

### அருள்திரு அடிகளாரின் முன்னோர்

உயர்திரு கோபாலநாயக்கர் அவர்களின் சிறிய தந்தையார் அமரர் உயர்திரு சண்முக நாயக்கர் அவர்களின் வாய் மூலமும், என்னுடைய மூதாதையர் வாய் மூலமும், 30, 35 ஆண்டுகளுக்கு முன் கேட்டவைகளையும் எழுத விரும்புகிறேன்.

நான் மேல்மருவத்தூரில் குடியிருந்து அன்னையின் ஆணைப்படி அந்த ஊரை விட்டு வெளியேறித் தற்போது செங்கற்பட்டு நகரில் குடியிருக்கின்றேன். மேல்மருவத்தூர் பற்றியும், நம் குருபிரான் பற்றியும் வரலாறு எழுதுபவர்களுக்குப் பின்வரும் விடயங்கள் உபயோகமாக இருக்கும் என்றெண்ணி இதனை எழுதுகின்றேன்.

நம் குருபிரான் வம்சத்தைச் சேர்ந்தவர்கள், ஒரு காலத்தே மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்த சமயத்தில் தென்திசையிலிருந்து காஞ்சி மாநகரைச் சேர்ந்த ஒரு சிற்றூரில் குடியேறி வாசம் செய்து வந்தார்கள். தொன்றுதொட்டுத் தெய்வீகத் தன்மை வாய்ந்த வம்சமாக விளங்கினார்கள்.

அந்த வம்சத்தைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் தெரியவில்லை. அவர் நீதியும் நேர்மையும் உடையவர். திவான் என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட அவர் பெரும் புள்ளியாக வாழ்ந்து வந்தார்.

**தாண்டவராயன் - செங்கல்பட்டு**

அக்காலத்தில் ஜமீன்தாரர் ஆட்சியில் பெரும்புள்ளிகளுக்கு ஓட்டுரிமை, கண்ட்ராக்ட் உரிமை போன்ற முக்கிய உரிமைகளை வழங்கி வந்தார்கள்.

அத்தகைய முக்கிய புள்ளிகளில் ‘திவான்’ எனப்பட்ட பெரியவரும் ஒருவர். அவர் சென்னை – விழுப்புரம் இடையே உள்ள கப்பி ரோடு என்ற நெடுஞ்சாலையை காண்ட்ராக்ட் எடுத்து வேலை செய்து வந்தார்.

### ஏரிக்கரை சரிந்து விழும்

அந்த வேலையைச் செவ்வனே செய்து வந்தபோது, தற்போதுள்ள மேல்மருவத்தூர் ஏரி கலங்கல் மடைக்கும், கிராமத்திற்கும் இடையேயுள்ள சுமார் ஒரு மைல் தூரத்தில் பகல் முழுவதும் வேலை நடைபெறுவதும், இரவு ஆனதும் சரிந்து விழுவதுமாக இருந்தது. ஒரு மாத காலம் இப்படியே நடந்து வந்தது. வேலைகள் துரிதமாக நடைபெற்றும் முற்றுப் பெறாமல் இடிந்து விழுந்தபடியே இருந்தது. இதனால் மனம் நொந்த நிலையில் திவான் ஓர் நாள் இரவு அதே இடத்தில் தன் வேலையாட்களுடன் உறங்கினார்..

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**“குழந்தை தாயை வெறுத்தாலும் தாய் குழந்தையை வெறுப்பதில்லை அதனால் தான் தாய் தெய்வம்.”**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Sudar"**


## செய்திச்சுடரில்...


**மேல்மருவத்தூர்: மலரும் நினைவுகள்**

Page: 1 – 7

UPCOMING EVENTS

Melbourne: 10, 13

Sydney: 8, 12

**திருமதி அம்மா பதில்கள்**

பக்கம்: 9

**Divine Miracles**

Page:11

**சித்தர்பீட விழாக்கள்**

பக்கம்: 9

**ஆன்மிக நாட்குறிப்பு**

பக்கம்: 14


# மேல்மருவத்தூர்! மலரும் நினைவுகள்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

## கனவில் சொல்லியது

அவ்வாறு உறங்கும்போது ஒரு கனவு. கனவில் அம்பாள் ஒரு வயதான பெண் உருவில் மஞ்சள் ஆடை அணிந்தபடித் தோன்றி, "மகனே..! வருந்தாதே! உன் கவலையைப் போக்குகிறேன். இவ்விடத்தில் குடிகொண்டு அருள் செய்வேன். நீ இங்கு நிரந்தரமாகக் குடிகொண்டு என்னை வழிபட்டு வா! நான் எக்காலங்களிலும் உன் தலைமுறையைப் பின் தொடர்ந்து அருள் செய்து பல ஆண்டுகளுக்குப் பின் உன் மரபில் நான் தெய்வ அம்சம் பெற்று உலகம் போற்றும் மாதாவாகக் காட்சி அளிப்பேன்.

நான் இரண்டு சிறிய உருவில், நீ பணி செய்யும் பாதைக்குக் கீழே உள்ளேன். அவற்றை எடுத்து நீ குடிகொள்ளும் இடத்திற்கு மேற்புறம் ஒன்றும், கீழ்ப்புறம் ஒன்றும் வைத்துப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வா!" எனக்கூறி மறைந்தாள். இவ்வூர் அதற்கு முன் கர்ண பரம்பரையைச் சேர்ந்தது. கர்ண பரம்பரைச் சொத்துக்கள் பூராவையும் திவான் விலைக்கு வாங்கினார்.

இங்கிருந்த வைத்தியர்கள் அருகில் உள்ள மலைக் காடுகளில் உள்ள மூலிகைகளைக் கொண்டு மருத்துவம் செய்து வந்ததனால் மருத்துவத்தூர் என்ற பெயர் வழங்கியது. பின் மருவத்தூர் ஆயிற்று.

பெரியவர் திவான் நெடுஞ்சாலை செப்பனிடும் பணியை மேற்கொண்டிருந்தபோது மேல்பாகம் உள்ளதை மேல்மருவத்தூர் என்றும், கீழ்ப்பக்கம் உள்ளதைக் கீழ்மருவத்தூர் என்றும் இரு கிராமங்களையும் பிரித்துப் பெயரிட்டும் வழங்கினார். கிராம முன்சீப் அதிகாரம் பெற்று, சீரும் சிறப்புமாக இருந்த ஊர் இது! பல வகையான பழத்தோட்டங்களும், கட்டிடங்களும் மிகுந்து கண்கொள்ளாக் காட்சியாக அப்போது இருந்ததாம்.

அந்நாட்களில் சுற்றுவட்டாரங்களிலும் சரி! இங்கும் சரி! களவு போன்ற தீய காரியங்களில் ஈடுபட்டவர்களைக் கல் தூணில் கட்டி வைத்துத் தண்டனையளிப்பார்கள். இதற்கு அஞ்சி இவ்வட்டாரங்களில் தீய நடவடிக்கைகள் எதுவும் நடைபெறாது.

திவான் குதிரையிலோ, குதிரை வண்டியிலோ பவனி வருவார். உயரதிகாரிகளோ மற்றவர்களோ வந்தால் உடனடி அனுமதி கிடையாது. திவான் கனவில் அன்னை கூறியதுபோல மேற்புறம் மாரியம்மன் கோயில், கீழ்ப்புறம் கனக துர்க்கை அம்மன் கோயில் உருவாயின. (தற்போது அடிகளார் தினசரி காலை, மாலை இந்தத் தெய்வங்களை வணங்கிச் செல்வது வழக்கம்).

அந்த நாளிலிருந்து இந்நாள் வரை ஊரில் மாரியம்மன் திருவிழா என்றால் அம்மன் அருள்வாக்கு உத்தரவு பெற்றே நடைபெறுவது வழக்கம்.

அந்த அருள்வாக்கும் அவர்கள் வம்சத்தில் மூத்த பெண்மணி மூலமே வரும். எனக்குத் தெரிந்தவரையில் கோபாலநாயக்கரின் தாயார் மற்றும் அவர் மனைவி மூலம் அருள்வாக்கு வந்து திருவிழா தொடங்கும்.

அம்பாளின் அருள் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வருகிறது. பெரியவரின் சொத்துக்கள் அழியாமல் பாதுகாத்து வரப்பட்டன. காலப்போக்கில் கடும்பஞ்சம் தாக்கியதால் சில காணி நிலங்கள் மாற்றப்பட்டன.

பிறகு அடிகளார் அவர்களுக்கும், திருமதி இலட்சுமி அம்மாள் அவர்களுக்கும் திருமண வைபோகம் நடைபெற்றது. அந்த அம்மையார் வந்து கால் வைத்த நேரம் நல்ல காலம் தொடங்கிவிட்டது. தொட்டதெல்லாம் துலங்கிற்று. சென்ற பொருள் யாவும் திரும்பி வந்தன.

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

## மேல்மருவத்தூர்! மலரும் நினைவுகள்...

(2ஆம் பக்க தொடர்ச்சி)

அன்றிருந்த திவான் குடும்பத்துப் பெருமை மீண்டும் வந்தது.

அடிகளார் குழந்தையாக இருக்கும்போதே நாகத்தினிடம் விளையாடினார். குழந்தைப் பருவத்திலேயே வீட்டிற்கு எதிரில் உள்ள மாரியம்மன் கோயிலைச் சுற்றி மழலை மொழியில் பாட்டுப்பாடி சுற்றுவது வழக்கம்.

### வேம்பில் நாகம் சுயம்பு

ஒருநாள் பணியிலிருந்து திரும்பும்போது திரு கோபாலநாயக்கர் தன் வயல்களைப் பார்வையிட்டபடி வந்தார். அங்கே ஓரமாகத் திரிசூலம் போன்ற வேப்பமரத்தைச் சுற்றிக் கொண்டு இருந்தவர் என்னைப் பார்த்தவுடன் கையசைத்து அழைத்தார். “இந்த வேப்பமரத்தில் ஏதாவது தெரிகிறதா பார்!” என்றார். என் கண்ணிற்கு ஒரு நாகம் படமெடுத்துப் படுத்திருப்பது போல் காட்சி அளித்தது. அது கண்டு என் உடல் சிலிர்த்தது.

“இரவு நேரம்.. வாருங்கள், நாளைக் காலையில் வந்து பார்த்துக்கொள்ளலாம்” என்றேன்.

அப்போது அவருடைய பத்து வயது மகள் திடீரென்று இறந்துவிட்டது. “இந்தக் குழந்தை தான் இது! அருகில் சுடலை உள்ளது. வாருங்கள்!” என்றேன்.

“சென்ற வெள்ளிக்கிழமை நான் வரும்போது இம்மரத்தில் நாகம் சுற்றி வளைத்துக் கொண்டிருந்தது. உடனே கற்பூர ஆராதனை செய்தேன்” என்றார். கோபாலநாயக்கர்.

அம்பாள் இங்கே ஒருபுறம் வேப்பமரத்தில் பாம்பாய்த் தோன்றி விளையாடினாள். அங்கே கோபாலநாயக்கர் வீட்டில் அடிகளாரோடு பாம்பாக வந்து விளையாடினாள். ஆயர்பாடியில் கிருஷ்ணன் வளர்ந்தது போல அடிகளர் வளர்ந்து வந்தார்.

### பெரும்ஜோதி

அன்று முதற்கொண்டு நாயக்கர் அந்த வேப்பமரத்திற்குத் தினசரி காலை மாலை விளக்கேற்றி வழிபட்டு வந்தார். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பொங்கலிட்டுப் படைத்து வந்தார். நாயக்கர் நிலங்களில் சாகுபடி விமரிசையாக நடைபெற்றது.

ஒருநாள் ஊருக்கு நடுவே இருந்த நாயக்கர் பண்ணையில் பெண்கள் வயற்காட்டில் வேலை செய்துவிட்டு மாலை 6.00 மணியளவில் வீடு திரும்பும்போது அருகில் உள்ள மலைப்பக்கத்திலிருந்து ஒரு பெரிய ஜோதி தோன்றி அதன் சுடர் ஆகாயத்தில் பறந்து சுடலை பக்கமாகச் சென்றது. பின் நேராகச் சென்று வேப்பமரத்தில் ஐக்கியமானது.

ஊரில் யாருக்கு என்ன ஆகுமோ என்று பயந்தார்கள்.

அருகில் உள்ள பண்ணையில் கரும்பு, நெல் விளைச்சல் அதிகமாக இருந்ததனால் திருடு ஏற்படும் என்று கருதி அங்கே குடிசையில் வாழும் ஆட்கள், இன்று ஆலயத்தின் அருகில் உள்ள கிணற்றில் கரையிலிருந்த மோட்டார் பம்பு ஷெட்டில் தங்குவது வழக்கம்.

தினசரி இரவு 12.00 மணிக்கு மேல் கதவைத்தட்டி, “மகனே! எழுந்து வா!” என்று ஒரு குரல் கேட்பது வழக்கம்.

வேலையாட்களோ, அந்தக் குரல் கேட்டுப் பயந்து போய், பக்கத்தில் சுடலை இருப்பதால் ஏதாவது பேய், பிசாசாக இருக்குமோ என்று நினைத்துக் கொண்டு கதவைத் திறப்பதில்லை.

ஒரு நாள் மாலை வேப்பமரத்திலிருந்து பால் வடிய ஆரம்பித்தது. சில பாக்கியசாலிகள் அதைப் பருகினார்கள்.

### புயல்காற்று

1966 நவம்பர் 27 புதன் கிழமை மாலை, இலேசாகக் காற்று வீசத் தொடங்கியது. மறுநாள் இடி மின்னலுடன் பலத்த மழை! கோபாலநாயக்கர் தன் பம்பு ஷெட்டில் தூக்கமில்லாமல் வேலையாட்களுடன் தங்கி வெளியே பார்த்துக்கொண்டு இருந்தார்.

வெள்ளிக்கிழமை விடியற்காலை 5.00 மணியளவில் புயல் காற்றின் வேகத்தில் அந்த வேப்ப மரம் மளமளவென்று முறிந்து சாய்ந்தது. அம்மரத்தின் அடியிலிருந்த புற்று கரைந்து அனைத்து உலகிற்கும் அருள் பாலிக்க அம்பாள் சுயம்பாகக் காட்சியளித்தாள்.

(4ஆம் பக்க தொடர்ச்சி)

## மேல்மருவத்தூர்! மலரும் நினைவுகள்...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

கோபலநாயக்கர் அந்த இடத்தைச் சுத்தம் செய்து, அந்த மரத்தை எதற்கும் உபயோகிக்காமல் அப்புறப்படுத்தி, சிறிய கொட்டகையமைத்துப் பூசை செய்து வந்தார்.

அன்றொரு நாள் கோபாலநாயக்கரின் மூதாதையராக இருந்த அந்தத் திவான் கனவில் கூறிய வாக்கை அம்பாள் கோபாலநாயக்கர் காலத்தே நிறைவேற்றினாள்.

1971ஆம் ஆண்டு அம்பாள் நிரந்தரமாக அடிகளாரை ஆட்கொண்டாள். அருள்வாக்கு ஆரம்பித்தாள்.

### முதல் அனுபவம்

எனக்கு ஒருநாள் அதிகக் காய்ச்சல் ஏற்பட்டது. அது முற்றிப் போய் ஒரு வாரம் தொடர்ந்தது. எந்த வைத்தியமும் பலன் தரவில்லை. ஒரு நாள் கனவில் அடிகளார் செவ்வாடையணிந்து கொண்டு “என் ஆலயத்திற்கு வாடா மகனே!” என்று மட்டும் கூறிவிட்டு மறைந்து விட்டார்கள்.

காலையில் எழுந்து என் தாயாரிடம் பங்காரு வாத்தியார் கனவில் தோன்றி “காளி கோயிலுக்கு வாடா மகனே!” என்று கூறினார் என்றேன். (அப்போதெல்லாம் அடிகளாரை வாத்தியார் என்றும், ஆலயத்தைக் காளிகோயில் என்றும் கூறுவதே வழக்கம்)

அன்று குளிக்காமலேயே “அம்மா! தாயே!” என்று கூறியபடி ஆலயம் சென்றேன். அருள்வாக்கில் கைவிரலை அசைத்து, “நான் உன் கனவில் வந்து கூப்பிட்ட பிறகுதானே ஆலயத்திற்கு வந்தாய்? எத்தனை தடவை இந்த வழியாக வந்து போகிறாய்... அப்போது எல்லாம் என் நினைவு உனக்கு வந்ததா?” எனக்கூறியபடி என் மார்பில் அம்பாள் ஒரு தட்டு தட்டியது.

அவ்வாறு தட்டிய வேகத்தில் தலைவலி, காய்ச்சல் வெளியேறி ஒரு பெரிய பாறாங்கல் சுமை இறங்கியது போல இருந்தது. மஞ்சள் நீரை முகத்தில் அடித்தது. வேப்பிலை கொடுத்து சாப்பிடச் சொல்லியது. காய்ச்சல் முழுதும் குணமாயிற்று. அதிலிருந்து இன்றுவரை 25 வருடமாக அது போலக் காய்ச்சல் எனக்கு வந்ததில்லை. செவ்வாடை அணிந்து தொண்டு செய்ய உத்தரவிட்டது.

### நரிக்குறத்திற்கு அருள்வாக்கு

ஒரு நாள் பணக்காரப் பெண்மணி ஒருவர் கழுத்து நிறைய நகைகள் அணிந்து கொண்டு அருள்வாக்கு கேட்கக் காத்திருந்தார். அவர் அருகில் ஓர் ஏழைப் பெண்மணியும், நரிக்குறத்தியும் அருள்வாக்குக் கேட்கக் காத்துக்கொண்டிருந்தனர். பணக்காரப் பெண்மணி அவர்களைப் பார்த்து, “உங்களுக்கெல்லாம் அருள்வாக்கு ஒரு கேடா!” என்று கிண்டலடித்தார். ஆனால் அம்பாள் பணக்காரப் பெண்மணியை ஒதுக்கிவிட்டு, நரிக்குறவப் பெண்மணிக்கு அவர்கள் மொழியிலேயே அருள்வாக்கு அளித்தாள். பணக்காரப் பெண்மணி மனம் வெதும்பி வீடு சென்றார்.

### நிதி வசூல்

ஒரு முறை ஆலயப் பணிகட்காகப் பொதுமக்களிடம் வசூல் செய்வதற்காகத் தொண்டர்களுக்கு நன்கொடை ரசீது புத்தகங்கள் தரப்பட்டன. யார் யார் எவ்வளவு வசூல் செய்தார்கள் என்று அம்பாள் கூறிவிடுவாள். ‘சொந்தச் செலவிற்கு இவ்வளவு எடுத்துக் கொண்டாயல்லவா?’ என்று கேட்டுவிடுவாள்.

ஒருமுறை நன்கொடை வசூல் செய்தவர்கள் பெயர்களைப் பிரசுரம் செய்தார்கள். நன்கொடை வசூல் செய்தவர்களில் நானும் ஒருவன். ஆனால் என் பெயரை விட்டு விட்டார்கள். எல்லோருக்கும் வேண்டுதற்கூறு புத்தகமும், விபூதிப் பிரசாதமும் கொடுத்தார்கள். வசூல் செய்த தொண்டர்கள் பெயரில் என் பெயரை ஒதுக்கிவிட்டதால் எனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தில் அந்தப் பாக்கெட்டை வீசியெறிந்துவிட்டேன். அதற்குள்ளே விபூதி, குங்குமப் பிரசாதங்கள் இருப்பது என் மரமண்டைக்குத் தெரியவில்லை.

### முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

இந்தச் சம்பவத்திற்கு முன் என் மனைவி கருவுற்றிருந்தாள். அம்பாளைக் கேட்டேன். “மகனே! சுகப் பிரவசம் ஏற்பட்டு ஆண் குழந்தை பிறக்கும். அக்குழந்தைக்கு மகேந்திரன் என்று பெயர் சூட்டு!” என்று கூறியிருந்தாள். குழந்தை பிறந்து நல்ல முறையில் வளர்ந்து வந்தது. ஆனால் திடீரென்று ஒரு நாள் இறந்துவிட்டது. குழந்தையை இழந்த துக்கம், அம்பாள் இவ்வளவு கூறியும் இக்குழந்தையைக் காப்பாற்றவில்லையே என்ற வெறுப்பு ஆகியவற்றால் ஆலயத்திற்குச் செல்வதை விட்டுவிட்டேன். என் மனைவி மட்டும் செல்வாள்.

(தொடர்ச்சி...5ஆம் பக்கம்)

## மேல்மருவத்தூர்! மலரும் நினைவுகள்...

(4ஆம் பக்க தொடர்ச்சி)

### என் நண்பன் வேண்டியது

என் நண்பன் ஒருவன் சிறந்த தொண்டன். நான் ஆலயத்திற்கு வராமலிருப்பது குறித்து அம்பாளிடம், "தாயே! அத்தொண்டனை ஆலயத்திற்கு வரச் செய்ய வேண்டும்!" என்று கோரினான்.

### அம்பாள் கூறியது

அதற்கு அம்பாள் "மகனே! அம்மகன் என் விபூதி குங்குமப் பிரசாதத்தை என் மீது வீசி எறிந்தான். அவன் செய்த வினையே அவனிடமிருந்து குழந்தையைப் பிரித்து விட்டது. அவன் என்றைக்கு வந்து என்னிடம் தஞ்சம் புகுந்து மன்னிப்புக் கோருகிறானோ அப்போது அம்மகனை வேறு விதத்தில் கொடுப்பேன்!" என்று கூறியது.

இதனை நண்பர் என்னிடம் கூறினார். எனக்கிருந்த வெறுப்பில் 'சரிதான் போய்யா!' எனக்கூறி அனுப்பிவிட்டேன். என் மனைவி, "சாமி என்ன செய்யும்? ஆலயத்திற்குச் சென்று அருள்வாக்குக் கேட்கலாம்" என்றழைத்தாள். நான் மறுத்துவிட்டேன்.

### அம்பாள் கேட்ட கேள்வி

மறுநாள் கனவிலே அம்பாள் அடிகளார் உருவத்தில் தோன்றி, "மகனே! செவ்வாடைப்பக்கம் வருகிறாயா அல்லது கடப்பாறை, கத்தி, மண்வெட்டிப் பக்கம் போகின்றாயா? உனது விருப்பம்!" என்று கூறி மறைந்தது. கனவை மனைவியிடம் சொன்னேன். என் மனைவி எனக்கு ஆறுதல் கூறி வெள்ளிக்கிழமை ஆலயம் சென்று அருள்வாக்கு கேட்கலாம் என்றாள். மனமில்லாமல் மனைவி வற்புறுத்தலால் ஆலயம் சென்றேன். அருள்வாக்கு கேட்கச் சென்றோம்.

### திட்டிக்கொண்டே காலில் விழுந்தேன்

அம்பாளைக் கண்டவுடன் எனக்குப் பரவசம் ஏற்பட்டு, ஆத்திரத்தில், "என் குழந்தையைப் பறித்துக் கொண்டாயே மோசக்காரி!" என்று கூக்குரலிட்டு அவள் காலில் விழுந்து அழுதேன். அம்பாள் பாதங்களில் விழுந்தபோது, அத்திருப்பாதங்கள் என் கண்களுக்குச் சிவந்த பாதங்களாகவும், கொலுசு அணிந்த குழந்தையின் பாதங்கள் போலவும் காட்சியளித்தன.

### பாவத்திற்குப் பரிகாரம்

"மகனே! என் பாதங்கள் மூலம் காட்சி கொடுத்தேன். கவலைப்படாதே! விபூதி குங்குமத்தையும் மற்ற எந்தப் பொருட்களையும் இனி வீசி எறியாதே! உன்னை மன்னித்தேன். பறித்த மகனைத் திரும்பக் கொடுக்கின்றேன்.

அதற்குப் பரிகாரமாக நீங்களிருவரும் ஈர உடையுடன் கருவறைக்கு வந்து, என் தலை முதல் கால் வரை 108 தடவை விபூதி, குங்குமம், பால், வேப்பிலை, மஞ்சள் நீருடன் அபிடேகம் செய்து ஆலயத்தை ஒன்பது முறை வலம் வர வேண்டும். மகன் திரும்பக் கிடைப்பான்.

கலியுகம் கட்டுக் கொள்ளாது. வீண்புரளி, விதண்டாவாதங்கள் கலியுகத்தில் ஏற்படும். எனவே, மறுமுறை கருவுறச் செய்து அதே மகனைப் பெற்றுக்கொள்!

அம்மகன் நல்ல முறையில் வளர்ந்து, எதிர் காலத்தில் ஆலயத்தின் மூலம் ஏற்பட இருக்கின்ற கல்விச் சாலையில் பயின்று, இங்கு ஏற்படப்போகும் தொழிற்சாலையில் ஒரு கண்காணிப்புப் பொறியாளராக ஆவான். எனக்குச் சிறந்த தொண்டனுமாக விளங்குவான்" எனக் கூறியது.

அம்பாள் கூறியதுபோல பரிகாரம் செய்தோம். பத்து மாதங்கள் சென்ற பின் அதே மகன் பிறந்தான். ஆதிபராசக்தி பாலிடெக்னிக்கில் கட்டணமின்றிச் சேர்த்துக்கொள்ளப்பட்டான். இப்போது இரண்டாம் ஆண்டு படிக்கிறான். குழந்தையிலிருந்தே அவன் 'ஓம் சக்தி! ஓம் சக்தி!' என்று சொல்லி தினசரி அம்பாள் படத்தை வைத்து வணங்கி வருகிறான்.

### அம்பாளைச் சோதித்த நாத்திகன்

நாத்திகன் ஒருவன் ஒரு நாள் தன் கையில் குச்சியை வைத்துக்கொண்டு அம்பாளைச் சோதித்தான். என் கையில் என்ன இருக்கிறதென்று அம்பாளைக் கேட்டான்.

"மகனே! கையைத் திறடா!" என்று அம்பாள் கூறினாள். அவன் கையைத் திறந்தான். திறந்தவுடன் தேள் ஒன்று கொடுக்கைத் தூக்கி நின்றது. "அம்மா! தாயே!" என்றபடிக் கீழே விட்டான்.

(தொடர்ச்சி..6ஆம் பக்கம்)

## மேல்மருவத்தூர்! மலரும் நினைவுகள்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

“மகனே! இதுதானடா நாத்திக உலக வாழ்க்கை!” எனக்கூறி அவன் முன் தலையில் கை வைத்து முடியை இழுத்தது. அம்பாள் கையில் முடியுடன் களிமண் எடுத்தது. “மகனே! உன் தலையில் இவ்வளவு நாட்கள் ஆழாக்குக் களிமண் இருந்தது. அவற்றை அகற்றிவிட்டேன். இன்று முதல் உனக்கு நல்ல ஆன்மிக புத்தி ஏற்படும். இந்தக் களிமண்ணை எதிரில் உள்ள குளத்தில் உன்னைப் போன்றவர்களிடம் காட்டி எறிந்துவிடு” எனக்கூறியது. அந்த நாத்திகன் மனந்திருந்தி 1000 பேருக்கு அன்னதானம் செய்தான்.

### வீட்டை விட்டு வெளியேறு

மேல்மருவத்தூரில் எங்கள் குடும்பம் வசித்து வந்தபோது, அக்கம் பக்கம் உள்ளவர்களால் என் குடும்பத்தில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் என்ற நிலை ஏற்பட்டது. அம்பாளைக் கேட்டேன்.

“மகனே! நீ குடும்பத்துடன் வசிக்கும் வீட்டை விட்டு வெளியூருக்குச் சென்றுவிடு” என்று கூறியது.

உடனே மனைவி மக்களுடன் எங்கு செல்வது? எதற்கும் பொறுத்துப் பார்க்கலாம் என்று நாள் தள்ளினேன்.

அவ்வாறு ஒரு நாள் இரவு வீட்டில் படுத்துறங்கும்போது என் தலைமாட்டில் ஏதோ ஓசை கேட்டது. என் மனைவியை எழுப்பி விளக்கேற்றச் சொன்னேன். என் தலைமாட்டில் ஒரு கறுப்பு நாய் உட்கார்ந்திருந்தது. உள்ளே தாழ்ப்பாள் போட்டிருக்கும் இந்த அறையில் கறுப்பு நாய் எப்படி வந்தது என்று பயந்து, தாழ்ப்பாளை அகற்றிக் கதவைத் திறந்து அந்த நாயை விரட்டிவிட்டேன். அதன் பிறகு இரண்டு தினங்கள் கழித்து, என் குமாரத்திகள் இருவரும் பாடசாலைக்குச் சென்று திரும்பிய பிறகு பக்கச்சுவர் அமைந்த ஒரு கிணற்றடியில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

விளையாட்டில் திடீரென்று என் மூத்த மகள் கிணற்றுச்சுவர் தடுத்து விழுந்து தலையில் பலத்த காயமேற்பட்டது. சிறிது தவறியிருந்தால் நீர் நிரம்பிய கிணற்றில் விழுந்திருப்பாள். பிறகு மருத்துவம் செய்தேன். அதன் பிறகும் இன்னல்கள் தொடர்ந்தன.

அம்பாளை மறுமுறை கேட்டேன். “மகனே! உடனே குடும்பத்தைக் கூட்டிக்கொண்டு செல். இல்லையென்றால் உயிர்களுக்கு ஆபத்து. கிணற்றில் விழ இருந்த உன் மகளை நான் கையெடுத்துக் காப்பாற்றிவிட்டேன். உடனடியாக வீட்டைக் காலி செய்!” என்று உத்தரவிட்டது.

உடனே நல்ல நாள் பார்த்து வீட்டைக் காலி செய்து வேறு ஊருக்குச் சென்றுவிட்டேன். அன்றிரவு பழைய வீட்டின் எதிரில் ஒரு மாடு, ஒரு நாய், ஒரு கோழி ஆகியவை இறந்து கிடந்தன. இந்த வீட்டில் நான் குடும்பம் நடத்த முடியாதபடி செய்வினை ஏவல்கள் செய்யப்பட்டிருந்தது. இன்றுவரை, சுமார் 20 வருடங்களாகியும், என் பழைய வீடு மேல்மருவத்தூரில் பூட்டியபடியே கிடக்கிறது.

### மகாபலிபுரத்தில் விபத்து

ஒரு முறை என் குடும்பத்துடன் மாசி மகத்திற்கு மகாபலிபுரம் திருவிழாவிற்குச் சென்றிருந்தேன். என் மூன்று வயது சிறிய மகளைப் பிடித்துக் கொண்டு கடலில் குளிக்கச் சென்றேன். பெரிய அலை ஒன்று வந்து அடித்து என்னையும் என் குழந்தையையும் பிரித்துவிட்டது. “அம்மா! தாயே!” என்று அலறியபடி எப்படியோ சமாளித்து என் குழந்தையை இறுகப் பற்றி இழுத்துவிட்டேன். குழந்தையின் காலிலிருந்த கொலுசை மட்டும் கடல் அலை பறித்துக்கொண்டது. அது மட்டுமா? பல பொருட்கள் காணாமற்போயின. பல இன்னல்கள் ஏற்பட்டன.

அம்பாளை அருள்வாக்கில் இது குறித்துக் கேட்டேன். “எங்கே சென்றாலும் ஆலயத்தையோ, படத்தையோ வணங்கிவிட்டுச் செல்! அப்படிச் சென்றிருந்தால் அந்த அசம்பாவிதம் நடந்திருக்காது. ஊருக்குப் போகும் சந்தோஷத்தில் மறந்தாய். இன்னல்கள் ஏற்பட்டன. அந்த நேரத்தில் ‘அம்மா! தாயே!’ என்று கூக்குரலிட்டாய். ஓடிவந்து அரவணைத்தேன். ஏற்கனவே ஒரு குழந்தையைப் பறிகொடுத்துவிட்டு என் மீது பழிபோட்டு வேதனைப்பட்டாய். எனவே, வந்து காப்பாற்றினேன். காணாமற்போன பொருட்கள் எதுவும் திரும்பாது!’ என்று கூறினாள்.

எந்தவொரு விஷயமானாலும் இப்போதெல்லாம் அம்பாள் உத்தரவில்லாமல் செய்வதில்லை. அடிக்கடி அம்பாள் உத்தரவு கோருவேன்.

### உரிமையோடு திட்டினேன்

ஆலயத்தைப் பலமுறை சுற்றி “அம்மா! தாயே! என் குடும்பத்தினல் உள்ள கஷ்டங்கள் தீர வேண்டும். என் மகன் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறான். அவனுக்கு ஏதாவது ஒரு வேலை கிடைக்க அருள் செய்ய வேண்டும்” என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தேன். கிடைக்கவில்லை. எனக்கு அம்பாள் மேல் ஆத்திரமும், வெறுப்பும் வந்துவிட்டது.

(தொடர்ச்சி..7ஆம் பக்கம்)

## மேல்மருவத்தூர்! மலரும் நினைவுகள்...

(6ஆம் பக்க தொடர்ச்சி)

ஒருநாள் ஆலயத்தின் எதிரில் நின்றுகொண்டு, "மோசக்காரி! நாசக்காரி! உனக்குக் கண் இருக்கிறதா? கும்பிடுகிறவர்களைத் தான் நீ கஷ்டப்படுத்துவாய். தூற்றுபவர்களுக்கு மட்டும் அருள் கொடுப்பாய். சோதனைக்காரி. இவ்வளவு கஷ்டப்படுகிறேன்.. பார்த்துக்கொண்டு வேடிக்கை காட்டுகிறாய்!" என்று உரிமையோடு திட்டிவிட்டு அழுதுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன்.

### திட்டியதற்குப் பலன்

இரவு மனைவி மக்களோடு பேசிக்கொண்டிருந்தேன். என் எட்டு வயது மகன் "அம்மா! தலை வலிக்கிறது" என்றான். சிறிது தைலம் தடவிவிட்டுப் பார்த்தால் கடும் சுரம்! பிறகு சிறிது நேரத்தில் குழந்தையின் தலை முதல் கால் வரை அம்மை போட்டுவிட்டது. இத்தனைக்கும் சுற்றுவட்டாரங்களில் எவருக்கும் அம்மை கிடையாது. உடனே அம்மாவுக்கு வேண்டிக்கொண்டு குழந்தையைத் தனியாகப் படுக்க வைத்துவிட்டு என் மனைவியிடம், காலையில் ஆலயத்தில் அம்பாளைத் திட்டிவிட்டேன் என்று கூறினேன்.

"நேரம் காலம் வந்தால் அம்மா தானாகக் கொடுப்பாள். பொறுத்துத் தான் செய்வாள். நீங்கள் திட்டினதால் தான் குழந்தைக்கு இப்போது அம்மை ஏற்பட்டது. குழந்தைக்குச் சரியான தூக்கமும் இல்லை" என்று என் மனைவி என்னைத் திட்டினாள்.

அன்றிரவு கனவில் அம்மா வந்தாள். ஒரு கிழவி போல மஞ்சள் சேலை உடுத்து வந்தாள். "ஏண்டா! உனக்குப் புத்தியில்லை? அவசர புத்தி! என்னை இன்று உரிமையோடு திட்டினாய். எனக்கு மிகவும் சந்தோஷம்! நீ கேட்டவைகளைக் கொடுக்க வழிவகை செய்கிறேன். கவலைப்படாதே! உன் இல்லத்தில் அம்மையாக வந்துள்ளேன். உடனே திரும்பிவிடுவேன்!" எனக்கூறி மறைந்தாள்.

கனவில் கண்டதை மறுநாள் மனைவியிடம் கூறினேன். மீண்டும் ஆலயம் சென்று அழுதோம். தொழுதோம். "ஏதோ புத்திகெட்டு உன்னைத் திட்டியது தப்புதான் தாயே! எங்களை மன்னிக்கக் கூடாதா?" என்று கோரினேன். குழந்தைக்கு ஐந்து தினங்களில் அம்மை நன்றாக இறங்கிவிட்டது. பையன் பாடசாலைக்குச் சென்றான்.

நான் எது கேட்டு அம்மாவைத் திட்டினேனோ அதற்கேற்றபடி என் குமாரனுக்கு எழுத்துத் தேர்விற்கு உத்தரவு கிடைத்தது. தேர்வில் முதல் வகுப்புக் கிடைத்தது. நேர்முகத் தேர்விலும் தேர்ச்சி பெற்று ஓரிரு மாதங்களில் வேலையிலும் சேர்ந்துவிட்டான். அம்மா கருணையே கருணை!

கேட்பவைகளைக் கொடுப்பாள். சோதனை செய்வாள். பொறுத்திருந்து பார்ப்பது உத்தமம். அதே போல அடிகளாரைப் பலமுறை தரிசித்து ஆசி பெற்றால் வெற்றி நிச்சயம்.

எவன் ஒருவன் அடிகளாரைக் கேலியும், கிண்டலும் செய்து, அவதூறாகப் பேசி வருகிறானோ அவன் நாளுக்கு நாள் அணு அணுவாக அதன் பயனை அனுபவித்தே ஆக வேண்டும். இது நான் கண்கூடாகக் கண்ட உண்மை!

### ஆடிப்பூர விழாவின்போது..

ஓர் ஆடிப்பூரத் திருவிழாவின்போது அடிகளார் அவர்கள் உருள்வலம் வந்தபோது பின்னால் நாகம் ஒன்றும் வலம் வந்தது. அந்தக் கண்கொள்ளாக்காட்சியையும் கண்டு களித்திருக்கிறோம்.

அம்பாளின் சித்து விளையாட்டில் எவ்வளவோ உள்ளன. குருபிரான் கருணை கூர்ந்து கடைக்கண் பார்வை பட்டால் இன்னும் பலவற்றை அவர் கமல பாதங்களில் சமர்ப்பிப்பேன்.

குருவடி சரணம்! திருவடி சரணம்!
ஓம் சக்தி!

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**ஐப்பசி – அமாவாசை–பௌர்ணமி :**

பசிப்பிணி நீங்கும்.
பசிப்பிணி அகலுகின்ற விதத்தில் நிறைந்த வளம் உண்டாகும்.

**கார்த்திகை – அமாவாசை–பௌர்ணமி :**

நற்கதி உண்டாகும். மன நிம்மதி கிடைக்கும்.

# Sydney - Mandrams - Upcoming Events – November 2018



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School

Moree Street – Westmead



| | | | |
|---|---|---|---|
| 02.11.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.11.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.11.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.11.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 30.11.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |


**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**



ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின்
மனதைக்கவர்ந்த
**ஆதிபராசக்தி இணையத்தளம்**
**ww.adhiparasakthi.co.uk**

**"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை**
**www.adhiparasakthi.co.uk என்ற**

**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**


## உள்ளம் என்ற பாத்திரத்துக்குத் தக்கபடி:

"ஆற்றில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. பெரிய குடத்தை எடுத்து வருபவன் அதில் தண்ணீர் எடுத்துக் கொள்கிறான். சிறிய குடத்தை எடுத்து வருபவன் அதற்குத் தக்கபடி தண்ணீர் முகந்து செல்கிறான். மண் செப்பை எடுத்து வருபவன் அதற்குத் தக்கபடி தண்ணீர் முகந்து செல்கிறான். எதையுமே எடுத்து வராதவன் கையாலாவது அள்ளிக் குடிக்கலாம் என்று அள்ளிக் குடிக்கிறான். உங்கள் உள்ளம் எனும் பாத்திரம் எப்படியோ அப்படியே அந்த அளவுக்குத் தக்கபடி உங்களுக்குப் பலன்களும் கிடைக்கும். எனவே பொறாமை அழுக்கு ஆகியவற்றைத் தவிர்த்துக் கொண்டு வா!"

- **அன்னையின் அருள்வாக்கு**



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

*’சக்தி’ என்ற சொல்லின் உண்மையான பொருள் என்ன..? இந்தப் புனிதச் சொல் பலத்தைக் குறித்ததா..? பக்தியைக் குறித்ததா? அல்லது வேறு பொருள் உண்டா என்று தெளிவு படுத்துங்கள் அம்மா?*

சக்தி என்பது கண்ணுக்கு புலப்படாத ஆற்றல். அந்த ஆற்றல் தெய்வ சக்தியாகவும் இருக்கலாம். விஞ்ஞானத்தில் அணுசக்தியாகவும் இருக்கலாம். விஞ்ஞானத்தைக் கண்டுபிடிக்கும் மக்கள் சக்தியாகவும் இருக்கலாம். இயற்கையும் சக்திதான். ஓம் சக்தி! பராசக்தி! என்று அழுத்தி உச்சரிக்கும் ஒரு பக்தனுக்கு அது தெய்வ சக்தியாகத் தோன்றுகிறது. அணு சக்தியால் இந்த உலகத்தையே அழிக்கலாம் என்று நிரூபிக்கும் விஞ்ஞானிக்கு, அது அழிவு சக்தியாகத் தோன்றுகிறது. மக்கள் அனைவரும் ஒன்று திரண்டால் இந்த உலகத்தையே மாற்றிக் காட்டலாம் என்று மக்கள் நினைக்கும்போது அது மகா சக்தியாக மாறுகிறது. “எங்கள் தந்தையர் நாடென்ற போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே” என்று பாரதியார் பாடி சுதந்திர உணர்வை வெளிக் கொணர்ந்தார். அதனால்தான் அனைத்து சக்திக்கும் ஆதியான சக்தியை “ஆதிபராசக்தி” என்று கூறுகிறோம்.

*அம்மா! தினமும் அம்மாவின் திருவுருவப் படத்திற்கு முன் தியானம் செய்வது என் வழக்கம். ஆனால் அவ்வாறு செய்யும் தியானம், திசையறிந்து செய்ய வேண்டுமென்று ஒரு புத்தகத்தில் படிக்க நேர்ந்தது. இல்லையென்றால் பெரும் தீமை ஏற்படும் என்றும் அப்புத்தகத்தில் கூறப்பட்டிருந்தது. இதிலிருந்து என் மனதில் ஓர் குழப்பம்… இதனைத் தீர்த்து வையுங்கள் தாயே..*

நம் அம்மாவின் திருவுருவப் படத்தையும் கிழக்குத் திசையை நோக்கித்தான் பூசையறையில் வைக்க வேண்டும். தியானம் இருப்பதும் கிழக்குத் திசையை நோக்கித்தான் ஆலயத்தில் அமர்கிறோம். திசையறிந்துதான் அமர வேண்டும் என்று படித்திருப்பதாகவும் கூறுகிறீர்கள். பிறகு என்ன உங்களுக்குக் குழப்பம்? என்னையும் குழப்பாமல் கிழக்குத் திசையை நோக்கியே அமர்ந்து தியானம் செய்யுங்கள். எல்லாத் திசைகளிலும் அம்மா வியாபித்து இருக்கிறாள். இருந்தாலும் சில விதிமுறைகள் மாற்றிக் கொள்ளாமல் இருப்பது மனத்திற்கு நிம்மதி தருமானால் அதில் தவறு இல்லை. இதனால் பெரும் தீமை ஒன்றும் நேர்ந்துவிடாது.

குருவடி சரணம்! திருவடி சரணம்!!



ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!

## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2018 - ஸ்ரீ விளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஐப்பசி | 21 | 07.11.2018 | புதன் | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 7 | 23.11.2018 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 20 | 06.12.2018 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| மார்கழி | 7 | 22.12.2018 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 10 | 25.12.2018 | செவ்வாய் | **கிறிஸ்மஸ்** |

## Melbourne - Mandrams – Upcoming Events – November 2018



## Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 02.11.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.11.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.11.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.11.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 30.11.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**Lalor**

**Join Prayers: Once a month - Sunday 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

## ஆன்மிககுரு
## அருள்திரு அடிகளார் அருளிய
## குரு உபதேசங்கள்



### மதிப்புக்கு அலையாதே

“நாமாகத் தேடுகின்ற மதிப்பு நிரந்தரமாக இருக்காது! அம்மாவாகப் பார்த்துக்கொடுக்க வேண்டும்! அது தான் நிலைக்கும்!”

### நானும் நீங்களும்

“என்னுள்ளே உன்னைக் காண்பாய், உன்னுள் நான் என்னைக் காண்கிறேன்”.

### சித்தாடல் மூலம் கோயிலை வளர்க்கக்கூடாதா?

“சித்தாடல் மூலமாகக் கோயிலை வளர்க்கக்கூடாதா? என்று சிலர் கேட்கிறார்கள். செய்யலாம் அது நிலையானது அல்ல!

இன்று உழைப்பில்லாது போனதால் தான் புதுப்புது நோய்கள் வருகின்றன. உழைப்பு இருந்தால் நோய் இல்லை.

நாம் உழைப்பு எடுத்துக் கோயில் கட்டினால் தான் பலன்தரும். நிலைக்கும். உழைக்காமல் இருந்தால் சோம்பேறித்தனம் தான் வளரும்.”

# Divine Miracles at Melmaruvathur

## I am Adhi Parasakthi – Mother of Lord Shiva:

Mrs.Thailambal (a school teacher) and her husband (a jeep driver in a Govt.office) were living in Pallipalayam near Erode. Her husband developed a sudden chest pain one day when he was driving the jeep to Salem. The officers admitted him in the hospital. There, the doctors said he had a heart attack and suggested that he must be treated by specialists at Coimbatore. His wife took him to Coimbatore, where he was in the ICU for 4-5 days. Then he was out of danger. Mrs. Thailambal had a strange dream one day. She saw Adigalar, clad in red dress asking her to come to Maruvathur. She also saw an old lady giving her Manjal and Kunmkum. Thailambal was confused. But the next day an old lady who had come to visit another patient, came near Thailambal and handed over manjal and kumkum and said “these are prasadams from Melmaruvathur”.

They were dumbfounded. They both wanted to go over to Maruvathur immediately – but decided to wait for some time till he got better. They went to Maruvathur in May. Thailambal asked her husband to do Anga pradakshanam. He was a little hesitant. When they went for the revelation, Mother welcomed them and enquired about his health. They cried before Mother. Then she said, “I am Adhi Parasakthi. Mother of Lord Shiva..”.

After some months they came again to Maruvathur. He was advised not to drive because of his health conditions. Mother said, “You can run the weekly worship centre. You make more people into this religious cult. I would take care of your family”. They Did the same. Mother once asked them to bring the photo which they had in the ‘mantram’. They underestimated its weight. Mother smiled and made it immovable. This made them realize the power of Mother. Mother also gave them the photo. One day in the night, around 12o’clock when she was performing Pooja to that photo, she saw a glow in that photo. The same photo is still there in Pallipalayam weekly worship centre. They take care of all activities of the ‘mandram’ and Mother takes care of them till date.

***

## ஆத்ம சக்தி

“பிள்ளைகளால் அறிவால், பெயரால் முன்னேற முடியாது. ஆன்மாவினால்தான் முன்னேற முடியும்.”

## தெய்வச் சிலையும் - ஆன்மாவும்

“ஒரு தெய்வச் சிலையை விட ஆன்மாவிற்குச் சக்தி உண்டு.”

## ஆன்மா சீராக இருந்தால்..


“பணம் இருந்தால் மனம் இல்லை. மனம் இருந்தால் பணம் இல்லை.
ஆன்மா சீராக இருந்தால் பணம், மனம் இரண்டும் சேரும்.”

அன்னையின் அருள்வாக்கு

# Sydney - Mandrams - Upcoming Events – November 2018



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 02.11.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.11.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.11.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.11.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 30.11.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli' Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.

## முடிவு காண முடியாத ஆராய்ச்சி

**"உயிர் என்றால் என்ன? உயிரின் தன்மை என்ன? நல்லது என்ன? கெட்டது என்ன? கசப்பு என்ன? இனிப்பு என்ன? என்று எல்லாவற்றையும் ஆராய்ந்து கொண்டிருந்தால் முடிவு கிடைக்காது.**

**மனதை ஒருமுகப்படுத்தினால் அமைதியும் நிம்மதியும் கிடைக்கும். மௌனம், கூடுவிட்டுக் கூடு பாய்தல், உயிர் உன்னை விட்டுப் போதல் இதற்கெல்லாம் விளக்கம் கூற முடியாது."**

- அன்னையின் அருள்வாக்கு

# Melbourne - Mandrams – Upcoming Events – November 2018

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**

**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**

(Reg. No. 2193)

**விக்டோரியா – அவுஸ்திரேலியா**

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

**07.11.1999 – மன்றம் 19 வருடங்களை நிறைவு செய்து 20ஆவது வருடத்தில் பயணிக்க குருவின் குருவருளையும் அன்னையின் திருவருளையும் வேண்டும் மன்ற சக்திகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 02.11.2018 | Friday | ஐப்பசி | 16 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 04.11.2018 | Sunday | ஐப்பசி | 18 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 09.11.2018 | Friday | ஐப்பசி | 23 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 11.11.2018 | Sunday | ஐப்பசி | 25 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 16.11.2018 | Friday | ஐப்பசி | 30 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 18.11.2018 | Sunday | கார்த்திகை | 02 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 23.11.2018 | Friday | கார்த்திகை | 07 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 25.11.2018 | Sunday | கார்த்திகை | 09 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 30.11.2018 | Friday | கார்த்திகை | 14 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |

**07.11.2018 – புதன் - அமாவாசை, 23.11.2018 – வெள்ளி - பௌர்ணமி**

## மூளைக்காய்ச்சலால் உயிருக்குப் போராடிய குழந்தை

**சக்தி இந்துமதி விஜயரங்கம்** - இராயபுரம் - சென்னை

எங்கள் வீட்டிற்கு அருகில் குடியிருப்பவர் சக்தி பாரதி. அவருக்கு நிவேதா என்று ஒரு மகள். அந்தக் குழந்தைக்கு ஒரு வார காலமாக நல்ல ஜுரம். நிறைய டாக்டர்களிடம் கொண்டு சென்று காட்டியிருக்கிறார்கள். கடைசியாக அடையாறில் உள்ள ஒரு டாக்டரிடம் காட்டினார்கள்.

கொடுக்கப்பட்ட மருந்துகள் சிக்கலை உண்டாக்கி மூளைக் காய்ச்சலில் கொண்டு வந்து விட்டதாகக் கூறினார்கள். நினைவு தப்பிய பிறகு குழந்தையை நுங்கம்பாக்கத்தில் உள்ள சைல்ட் டிரஸ்ட் ஆஸ்பத்திரியில் சேர்க்கச் சொல்லி விட்டார்கள்.

அங்கு சேர்ந்ததும், அங்கிருந்த டாக்டர்கள் 48 மணி நேரம் கெடு வைத்துவிட்டார்கள். அந்தக் குழந்தையின் பாட்டி எங்கள் வீட்டிற்கு வந்து அழுதார். குழந்தையின் நிலைமை ஆபத்தில் இருக்கிறது என்று புரிந்தது.

ஆலயத்திலிருந்து வாங்கி வந்த குங்குமம் வீட்டில் இருந்தது. வீட்டு மாடியிலுள்ள எங்கள் மன்றத்தில் எலுமிச்சம் பழம், குங்குமம் எடுத்து வைத்துக்கொண்டு, குழந்தை நலம்பெற அன்னையை வேண்டிக் கொண்டு தியானம் இருந்தோம்.
பாட்டியிடம் கலச தீர்த்தம், குங்குமம், எலுமிச்சம்பழம் கொடுத்துக் குழந்தையின் தலைமாட்டில் வைக்கும்படிச் சொல்லி அனுப்பினேன்.

மதியம் 2.00 மணியளவில் நானும் சக்தி அருள்மொழியும் அந்த மருத்துவமனைக்கே சென்றோம். கூடவே வேள்விக்கலச தீர்த்தமும் எடுத்துச் சென்றோம்.

(தொடர்ச்சி..14ஆம் பக்கம்)

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01.11.2018 | வியாழன் | ஐப்பசி | 15 | கௌரி விரதம் 14ஆம் நாள் |
| 02.11.2018 | வெள்ளி | ஐப்பசி | 16 | ஐப்பசி வெள்ளி – 3ஆவது வாரம்<br>கௌரி விரதம் 15ஆம் நாள் |
| 03.11.2018 | சனி | ஐப்பசி | 17 | கௌரி விரதம் 16ஆம் நாள் |
| 04.11.2018 | ஞாயிறு | ஐப்பசி | 18 | ஏகாதசி - கௌரி விரதம் 17ஆம் நாள் |
| 05.11.2018 | திங்கள் | ஐப்பசி | 19 | பிரதோஷம் - கௌரி விரதம் 18ஆம் நாள் |
| 06.11.2018 | செவ்வாய் | ஐப்பசி | 20 | **தீபாவளி**<br>கௌரி விரதம் 19ஆம் நாள் |
| 07.11.2018 | புதன் | ஐப்பசி | 21 | **அமாவாசை விரதம்**<br>கேதார கௌரி விரதம் நிறைவு |
| 08.11.2018 | வியாழன் | ஐப்பசி | 22 | கந்த ஷஷ்டி விரதம் 1ஆம் நாள் |
| 09.11.2018 | வெள்ளி | ஐப்பசி | 23 | ஐப்பசி வெள்ளி – 4ஆவது வாரம்<br>கந்த ஷஷ்டி விரதம் 2ஆம் நாள் |
| 10.11.2018 | சனி | ஐப்பசி | 24 | கந்த ஷஷ்டி விரதம் 3ஆம் நாள் |
| 11.11.2018 | ஞாயிறு | ஐப்பசி | 25 | சதுர்த்தி - கந்த ஷஷ்டி விரதம் 4ஆம் நாள் |
| 12.11.2018 | திங்கள் | ஐப்பசி | 26 | கந்த ஷஷ்டி விரதம் 5ஆம் நாள் |
| 13.11.2018 | செவ்வாய் | ஐப்பசி | 27 | சூரசம்ஹாரம் - கந்த ஷஷ்டி விரதம் நிறைவு |
| 14.11.2018 | புதன் | ஐப்பசி | 28 | ஸ்ரீ சண்முகர் திருக்கல்யாணம் |
| 16.11.2018 | வெள்ளி | ஐப்பசி | 30 | ஐப்பசி வெள்ளி – 5ஆவது வாரம் |
| 19.11.2018 | திங்கள் | கார்த்திகை | 03 | ஏகாதசி |
| 20.11.2018 | செவ்வாய் | கார்த்திகை | 04 | பிரதோஷம் |
| 22.11.2018 | வியாழன் | கார்த்திகை | 06 | சர்வாலய தீபம் - விஷ்ணுவாலய தீபம் |
| 23.11.2018 | வெள்ளி | கார்த்திகை | 07 | திருக்கார்த்திகை – குமாராலய தீபம்<br>**பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் - சிட்னி |
| 24.11.2018 | சனி | கார்த்திகை | 08 | விநாயகர் விரதம் - விநாயகர் கதை ஆரம்பம் - 1ஆம் நாள் |
| 26.11.2018 | திங்கள் | கார்த்திகை | 10 | சங்கடஹர சதுர்த்தி – விநாயகர் கதை - 3ஆம் நாள் |
| 03.12.2018 | திங்கள் | கார்த்திகை | 17 | ஏகாதசி |
| 04.12.2018 | செவ்வாய் | கார்த்திகை | 18 | பிரதோஷம் |
| 07.12.2018 | வெள்ளி | கார்த்திகை | 21 | **அமாவாசை விரதம்** |
| 12.12.2018 | புதன் | கார்த்திகை | 26 | கஜமுக சம்ஹாரம் |

## மூளைக்காய்ச்சலால் உயிருக்குப்....

குழந்தையைப் பார்க்க எங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. சரி! போகட்டும்! குழந்தை உதட்டில் சிறிது தீர்த்தத்தைத் தடவுங்கள் என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன்.

இரவு 8.00 மணிக்கு இரண்டு துளி தீர்த்தம் குழந்தையின் உதட்டில் விட்டிருக்கிறார் குழந்தையின் அப்பா! குழந்தை உடனே கண்களைத் திறந்து பார்த்திருக்கிறாள். ஓடிப்போய் டாக்டரிடம் சொன்னார் அவர்.

டாக்டர் வந்து பார்த்தார். “குழந்தைக்கு நினைவு வந்திருக்கிறது. ஆனாலும் பக்க விளைவுகள் வரலாம், சரியாகப் பேச வராமல் போகலாம், கால் நடக்க வராமல் போகலாம். பொறுத்திருந்து பார்க்கலாம்” என்றார் டாக்டர்.

தீர்த்தம் பட்டவுடன் குழந்தை அப்பாவிடம் சொல்லியிருக்கிறாள். “அடிகளார் அம்மா கனவில் வந்தாங்க அப்பா! நான் ஆஸ்பிட்டலிலா இருக்கிறேன்..? கருவறை சாமியுடன் ஒரு இருட்டறையில் இருந்தேம்மா…” என்று சொல்லியிருக்கிறாள். குழந்தை எல்கே.ஜி. தான் படிக்கிறாள். நன்றாகப் படிப்பாள், பேசுவாள்.

கலசதீர்த்த மகிமையால் குழந்தை பிழைத்துவிட்டாள். நிவேதா என்ற அவள் பெயரைச் “சக்திப்பரியா” என்று மாற்றிவிட்டார்கள். நினைவு நன்றாக இருக்கிறது. கணக்கில் 100இற்கு 100 வாங்கியிருக்கிறாள்.

அதன்பிறகு, நவராத்திரி ஒன்பது நாளும் குழந்தையோடு மருவத்தூர் ஆலயத்தில் தங்கிக் கொண்டு தொண்டு செய்தார்கள். குழந்தையின் தாய் இப்போது செவ்வாடை அணிந்த அம்மாவின் பக்தை!